15th February 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆமாம். பெர்ஸனல் பைல்களில் எழுதப்படும் விஷயங்களை மேலதிகாரிகள் கவனிக்க வேண்டியிருக்கிறது. எந்த உத்தியோகஸ்தரைப் பற்றியாவது அவருடைய பெர்ஸனல் பைலில் ஏதாவது பாதகமாக எழுதப்பட்டால், அது பாதிக்கப்பட்ட அந்த உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர் ‘ எக்ஸ்ப்ளனேஷன் ’ கொடுத்தால் அது பெற்றுக்கொள்ளப்பட்டு அதுவும் பெர்ஸனல் பைலில் பதிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Sir, is it a fact that some complaints have reached the Government that some superior officers on the last stages of transfer make some adverse remarks in the file of their junior officers, with the result that no reasonable opportunity is given to the junior officers to explain their conduct to the particular officer who makes such remarks in their files?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not aware of any such complaint but if any individual cases are brought to the notice of the Government, certainly they will be considered.

Water-Supply Scheme for Erode

* 8 *S.N.Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any deputation from Erode Municipal Council had an interview with the Minister in connexion with the provision of funds for the Erode Water-supply Scheme in 1958?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : முதலில் அங்கு இருக்கக்கூடிய சேர்மன் தண்ணீர் திட்டம் பற்றி விவாதிப்பதற்கு வருகிறேன் என்று சொல்லும்போது வேண்டாமென்று சொல்லிவிட்டு, எதிர்க்கட்சியில் உள்ளவர்களை வரச் சொல்லி விவாதிக்க காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தமாதிரி ஒன்றுமில்லை. என் ஞாபகத்திலிருந்து சொல்லுகிறேன்—இந்தத் தருணத்தில் ஒரு டெப்யுட்டேஷன் அவசியமில்லை என்று சொல்லியிருக்கலாம். மீண்டும் நாங்கள் வருகிறோம் என்று சொன்னால் வாருங்கள் என்று சொல்லியிருக்கலாம்.

Water-Supply Scheme for Tiruppur Municipality

* 9 *S.N.Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount allotted in 1957–58 for Water-Supply Scheme for the Tiruppur Municipality?

THE HON. SRI M. A. MANICKAVELU : A loan of rupees ten lakhs has been sanctioned to the Municipal Council, Tiruppur, during the current year.

SRI N. K. PALANISAMI : தண்ணீர் எந்த இடத்தில் எடுப்பது என்று முடிவு செய்யப்படவில்லை. அப்படியிருக்கும்போது ஏராளமான பணம் செலவு செய்து பைப்புகள் போட்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் தண்ணீர் எடுப்பது என்பது பற்றி முடிவு செய்யப்பட்டு விட்டதா ?